# தத்துவவிவேசினி

இந்துசுவக்கியானசங்கத்தாரால்பரிபாலிக்கப்பட்டுவருகின்ற

வாராந்த திராவிட சுவக்கியான பத்திரிகை.

Vol. V.—No. 36 ] MADRAS:—SUNDAY SEPTEMBER, 5, 286. A. S. [Monthly, 4 Annas.


சொல்லுகசொல்லைப்பிறிதோர்சொலச்சொல்லை
வெல்லுஞ்சொலின்மையறிந்து.—குறள்.


| | |
|---|---|
| உபநிஷத்துசந்தேகம். | கல்லுநாதனல்லவோ. |
| சமயக்குரவருக்கு அழுக்காறுண்டா. | நாஸ்திகமதகண்டனம். |
| மெய்யறிவு. | கடிதம். |


## உபநிஷத்துச்சந்தேகம்.

———o———

ஆகஸ்டுமீ 15வ தத்துவவிவேசினியில் "பிராமணனென்பவன் யாவன்" என்பதைப்பற்றி, வஜ்ரசூச்சிகோபநிஷத்தில், க - வது ஜீவன், உ - வது தேகம், ங - வது வருணம், ச - வது ஞானம் ரு - வது கர்மம், சா - வது தர்மம், இவைகாரணமாக ஒருவனுக்கு பிராமணத்துவம் வருவதில்லையென்று சிலநியாயங்களாற் கண்டித்து, கடைசியில் பகவானை உள்ளங்கை நெல்லிக்கனிபோலப் பிரத்தியட்சத்தில் கண்டுகொண்டவனே பிராமணனென்று சொல்லியிருப்பதாகக் கண்டிருக்கிற சங்கதிகளை மேலாக வாசிக்கும்போது சரியானதுபோலத் தோற்றினபோதிலும், ஊன்றி வாசிக்கும்போது, வஜ்ரசூச்சிக்குப் பதவுரையெழுதிய ராயரவர்களுக்குப் பிராமணத்துவத்தைக் குறித்த உலகவழக்கச் சொல்லைப்பற்றிச் சந்தேகமுண்டானதுபோல, அந்த உபநிஷத்தைப்பற்றி எனக்குச் சில சந்தேகந்தோன்றின.

பிர்மத்தைக் கண்டவன் பிராமணனென்பது—'பிர்மக்கியானந்து பிராம்ஹண' என்கிற வாக்கியத்தின்படி பிர்மத்தின் தன்மையை யறிந்தவன் பிராமணனென்பதற்கு மிஞ்சியிருக்கிறது. பிர்மத்தைக் காண்பதற்கு அதின் ஸ்வரூபமென்ன? பிர்மம் கண்டமாயிருந்தால்மாத்திரம் காணக்கூடுமேயல்லாது அகண்டமானால் எப்படி காணக்கூடும்? எந்த அம்சத்தைத்தான் காணமாட்டுவான்? கண்டதாக நடிக்கிறவன் பிறருக்குக் காட்டவுமாட்டான், தன்னைப்போல (பயித்தியக்காரன்) ஆனாற்றான் காணலாமென்பான். இராமலிங்கபிள்ளை ஒருவித பயித்தியத்தினாலும், சச்சுதானந்தம்பிள்ளை மமதையினாலும் மற்றுஞ்சிலர் மனப்பிரமையினாலும் பிரமத்தைக்கண்டதாக நடித்து மரித்தது மூக்கறையன்கதைபோ லிருக்கிறது. இராமலிங்கபிள்ளை தன்னுடைய சில சிஷர்களுக்கு - ந - ம - சி - வா - ய - என்னும் இப்பஞ்சாட்சரங்கள், சிற்சத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, க்ரியாசத்தி என ஐந்து சத்திகளின் குறியென்றும், முறையே உயிர்க்கொளியாக நிற்பதும், பிராணன் முதலிய வாயுவாக நிற்பதும், பஞ்சபூதமாகநிற்பதும், ஐம்பொறி யுணர்ச்சியாக நிற்பதும், மற்றை வினைத்துணையாக நிற்பதுமாகிய அந்தப் பஞ்சசத்திகளின் வசப்பட்டதே பிரபஞ்சமாதலால் அந்தப் பஞ்சாட்சரத்தை எப்போதும் மறக்கலாகாதென்று உபதேசித்தார். அட்சரங்களை யேற்படுத்தினவர் யாரோ, பாஷையுண்டானதெப்படியோ அந்தச் சங்கதிகளைப் பின்னால் எழுதுகிறேன். சிலநாளுக்குமுன்னே திருவல்லிக்கேணியில் ஒரு ஞானியார் தன் சிஷர்களோடும் சிநேகிதர்களோடும் ஞானமயக்குவார்த்தைகளைப் பேசிக்கொண்டிருக்கையில் வெயிலினால் தூக்கமயக்க மேலிட்டுக் குறட்டைவாங்கிச் சற்றுத்தூங்கி விழித்துக்கொண்டபிறகு, அங்கிருந்தவர்கள் சுவாமிக்கு இளைப்பாயிருக்கிறதுபோலக் காணுகிறதென்று உபசாரவார்த்தைசொன்னார்கள்; அதற்கவர் நான் தூங்கினதாக நினைத்துக்கொண்டீர்களோ? என் மனஞ் சென்றிருந்தவிடத்தை நீங்கள் அறிந்திலரென்று சொன்னாராம். ஞானிகளின் தன்மை யிப்படித்தா னிருக்கிறது. அவர் அப்படிச் சொன்னபோது, 'வஞ்சமனத்தான்படிற்றொழுக்கம் பூதங்க, ளைந்துமகத்தேநகும்' என்ற குறளின்படிக்குத்தான் அவர் மனமிருந்திருக்கவேண்டும். கொஞ்சகாலம் ஒரு ஞானியாருடைய திருக்கூட்டத்தில் யானு மொருவனாயிருந்தேன். என்னையும் சில பயித்தியக்காரர் பூசித்துவணங்கினார்கள். அப்போதே எனக்குள் புன்னகைதான். நிஷ்டைக்குப் பல படிகளுண்டு. முதற்படியாவது—சிஷனுக்கு அபிஷேகமாகி, ஆசானிடத்தில் அவன் உபதேசம்பெற்றவுடனே கைகளின் விரல்களால் கண்களையும் காதுகளையும் நாசியையும் மூடி மந்திரத்தை ஜெபித்துக்கொண்டிருக்கையில் நெற்றிக்குநேராக சுடரொளிதோன்றி அது வரவர அதிகரித்துக் கடைசியில் வட்டமாகக் காணுகிறது; இதுவே பரஞ்சோதி. காதுகளை அடைத்துக்கொள்வதினாலே அணுத்திரளொலி சேரச்சேர ஒரு கிங்காரசத்த முண்டாகிறது; இதுவே நாதவிந்து. இவ்வாறு கொஞ்சகாலம வழக்கப்படுத்தியபின்பு, உ - வதுபடி—கைகளின் உதவியில்லாமல் கண்களை மூடிக்கொண்டு நிட்டைகூடி வழக்கப்படி சோதியையும் நாதவிந்தையும் பாவித்துணர்வது. ங - வதுபடி—கண்களைத் திறந்துகொண்டு நாசிமுனைமேல் நாட்டம்வைத்துக் கவனத்தைச் செலுத்தி அவ்வாறே பாவித் துணர்வது. ச - வதுபடி—நாவி னுனியை அண்ணத்தின் மேல்துவாரத்திற் செலுத்திக் கொஞ்ச கொஞ்சமாய் அடைத்துக்கொண்டே வந்து சுவாச பந்தனஞ் செய்ய வழக்கப்படுத்துவது. இவ்வாறு என்னசெய்தபோதிலும் இவற்றாற் காணும் பயனென்னை! எதையும் மனோபாவத்தினாலே காணுவதுதான். இவற்றை அனுஷ்டித்தாலும் அனுஷ்டியாவிட்டாலும், ஸ்திரீ யின்பத்தை நீக்கி யிருப்பானாயின், கட்டுமஸ்தான சரீரமுடையவனாய்ப் பின்னுங் கொஞ்சகாலம் அதிகமாய்ச் சீவித்திருப்பன். இவ்வளவேயல்லாமல் வேறொன்று மிராது. சோதியும் நாதவிந்தும் தோன்றுவதற்கு ஆசா னுபதேசமல்லாமல் வேறே காரண மிருக்கிறதென்று நிச்சயிக்கக்கூடும். அதை (Science) சாஸ்திரவழியா யல்லாமல் வேறுவிதமா யறியக்கூடாதவர்களும் மேலே நான் சொன்னபடி செய்வார்களாகில் அப்படியே காணுவார்கள். எண்ணெயிட்டுக்கொள்ளும்போதும் கண்ணைமூடி அழுத்தும்போதும் பிரகாசந் தோன்றுவதை கவனித்தவர்கள் சாட்சி சொல்லுவார்கள்; ஆதலால் அப்படி தோன்றுவதற்கு சுபாவத்திலேயே வேறுகாரண மிருக்கிறதென்று யாவரும் சுலபமாய் நிச்சயிப்பார்கள். க-வது, ஜீவன் பிராமண னல்லவென்றும், உ-வது, தேகம் பிராமணனல்லவென்றும் சொல்லியிருக்கிறது. பிர்மத்தைக் கண்டவன் பிராமண னென்பவன் மனிதன்தானே. அப்போது கண்டது எது? ஜீவனா, தேகமா? தேகமில்லாது ஜீவனும் ஜீவனில்லாது தேகமும் யாதொருகாரியத்தையும் செய்யமாட்டாது. முக்கியமாய் தேகமில்லாது ஜீவனிருப்பதே தெரியாது. ஜீவனும் தேகமும் ஒன்றுபட்டிருந்தே ஒரு காரியத்தைச் செய்யவேண்டும். ஆதலால் ஜீவனும் தேகமும் ஒன்றுபட்டிருந்து பிர்மத்தைக் காணுகிற பதார்த்தத்துக்கே பிராமணத்துவம் வரவேண்டும். அந்தப் பதார்த்தம் மனிதனே. அப்போது எல்லா மனிதரும் ஒரேஜாதியே. அப்படியிருக்க, அந்த உபநிஷத்தில் பிராமணவருணந்தவிர மற்ற வருணங்கள் அடிக்கடி எடுத்தாளப்பட்டன. இந்த வருணங்கள் எவ்வாறு எவ்விடத்துண்டாயின? தொழிலினாலும் குணத்தினாலும் வரும் பெயராயிருந்தால், அதைச் சிறப்புப் பெயராகக் கொள்ளவேண்டியதேயல்லாமல், எந்தவகையினாலும் ருசுவுக்கு வெளிப்படாமல் மயக்கத்தில் மறைந்திருக்கிற வெற்றுச்சொல்லாகிய ஜாதிப்பெயராகக்கொள்வது எவ்வளவேனுந் தகாது; தகுதியெனக்கொள்வோமாகில் முன்னே அரசராயிருந்தும் இப்போதும் அப்படியிருக்கிற துருக்கர் முதலானவர்களை க்ஷத்திரிய ஜாதியாராகக் கொள்ளவேண்டிவரும். கபிலர்என்பவர் ஒருபிராமணனால் வளர்த்துக்கொள்ளப்பட்ட பிள்ளை. அவருக்கு உபநயனஞ் செய்ய எத்தனப்பட்டபோது மற்றப் பிராமணர்கள் ஆட்சேபித்ததினால் தன் காரியம் நிறைவேறாமைபற்றி, ஜாதிபேதமில்லையென்பதைக்காட்ட ஒருஅகவல் செய்திருக்கிறார். அதுபோலவே, அந்த உபநிஷத்துசெய்தவர் சந்நியாசியா யிருந்திருக்கவேண்டும். அவர் தான் பிர்மத்தைக்கண்டதாக நடித்து, தனக்குப் பெருமையும் மற்றப் பிராமணர்களுக்குச் சிறுமையும் கற்பிக்கவேண்டி பொதுப்படக் கூறியதுபோல அந்த உபநிஷத்தைச் செய்திருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்.

உபநிஷத்தில் சில ருஷிகள் பிறந்தஸ்தானத்தைச் சொல்லியிருக்கிறதேயல்லாமல், பீஜத்தைச்சொல்லவில்லை. ஒருருஷி பெண்மானைக்கண்டு மோகித்து ஆண்மான்வடிவெடுத்துப்புணர ருஷியசுரங்கன் பிறந்ததாகச் சிலர்சொல்லுகிறார்கள். கௌசிகன் தர்ப்பையினாற்பிறந்ததாகச் சொல்லியிருக்கிறது; குசமென்பது தர்ப்பை: (குசசம்பந்தம்) கௌசிகனென எழுதியிருக்கிறது: அதுசரியல்லவாம். (ராமாயணம், பாலகாண்டம.) కుశోనామమహీపతిః॥ குசோநாமமஹீபதி: என்னும் வாக்கியத்தின்படிக் குசனென்னும் பெயரையுடைய ராசனொருவன்; அவனுக்குக் குசாம்பன், குசநாபன் என இரண்டு குமாரர்கள்; குசநாபனுடையபிள்ளை காதி, இவன்பிள்ளை விஸ்வாமித்திரன். 'தசரதன் புத்திரன் தாசரதி' என்றாற்போல, குசனுடைய சந்ததி கௌசிகனென்னும் பெயர் அந்த சந்ததியானாகிய விஸ்வாமித்திரனுக்கும் வந்தது. [ஜாம்பூகன் கதைதெரியவில்லை] வால்மீகி ஆதியில் ஒருவேடன், அவன் உபதேசம்பெற்று நெடுநாள் ஒருமரத்தடியில் நிஷ்டைகூடியிருக்கையில் புற்றுமேலிட்டு மூடிக்கொள்ள, பிறகு புற்றிலிருந்து வெளிப்பட்டவனாதலால், புற்றிலிருந்து பிறந்தவனாகமாட்டான். பராசரர் செம்படத்தியைச் சேர்ந்து பிறந்தவர் வியாசர். [கௌதமன்சங்கதி தெரியவில்லை]. பிர்ம்மா ஊர்வசியென்னுந் தேவதாசியைச்சேர வசிஷ்டர்பிறந்தார். மித்திரன், வருணன் என்னுந்தேவர்கள் ஏதோஒருகாரணத்தினால் அதிவிரகங்கொண்டு ஸ்கலிதமான இந்திரியத்தை வீண்போகவொட்டாமல் ஒருகுடத்திற் பிடித்துவைக்க, அதிலிருந்து பிறந்தவர் அகஸ்தியர். இப்பிறப்புகளையும் இப்படிப்பட்ட மற்றபிறப்புகளையும்பற்றிச் சாவகாசமாய்ச் சர்ச்சைசெய்கிறேன்.

மேற்படி பத்திரிகையில் மார்க்கண்டேயர் கதையொன்றிருக்கிறது—ஒருநாள் வழக்கப்படி பூஜானுஷ்டானங்களை முடித்துக்கொண்டு அவர் பிராமண நமஸ்காரத்துச்குப் புறப்பட்டபோது, ஸ்வாமி அவருடைய பக்திவிசுவாசத்தைப் பரிசோதிக்கும்பொருட்டு பிராமணன் தென்படாமற்செய்தாராம். (ஹிந்து தேவர்களுக்குத் தங்கள் சர்வசக்தியையோர்பக்கத்தில் ஒளித்துவிட்டு, அற்பமனிதனைப்பரிசோதிப்பதே பெரியவேலையாயிருக்கிறது.) மார்க்கண்டேயர் ஆசாரத்துடனிருக்கையில் பறைச்சியோடுபேசுவரோ! அன்றியும் அவள் மார்பைக் கழுவினபோது வியர்வைக் கசிவைக் கழுவினதாக எண்ணிக்கொள்ளக்கூடாதோ? அந்தப்பூர்வகாலம் மஹாபரிசுத்தமானகாலமென்று சொல்லப்படுவதால், ஸ்திரீஜாதியோடு நாணமில்லாமல் ஸ்தன்னியசங்கதியைப்பற்றிப் பேசியிருப்பரோ? இக்காலத்தில் புருஷன்யாராவது ஒருஸ்திரீயை அப்படிக்கேட்பரா! கேட்டாலும் அவள் சும்மாயிருப்பளா! இந்தச்சங்கதிகளையெல்லாம் ஆலோசிக்கும்போது, புராணக்காரர் தான் கொண்டகருத்தைமுடித்துக்காட்டத் திருஷ்டாந்தமாக, ஸ்வாமியையும்பற்றுமேயென்கிற முன்பின்யோசனையில்லாமல் அப்படிப்பட்ட கதைகளைக்கற்பித்திருக்க வேண்டும். அப்படிக்கன்றி, மெய்க்கதைகளாகநம்பவேண்டுமென்றால், தெய்வீகமும் பைசாசத்துவமும் கலப்புற்றிருக்கிற இக்கதைகளைநம்புவதுபோல், அப்படிப்பட்டகதைகளடங்கிய அரேபியன்நைட்டை யேன் நம்பக்கூடாது? இதைப்பற்றியொருவரைக் கேட்டபோது, அவை கட்டுக்கதைகளென்றுமுதலிலேதானே சொல்லியிருக்கிறதேயென்றார். அப்படிச்சொல்லாதிருக்குமாயின, அவர்நம்புவார்போலும். அக்கதைகள் ஆதியில் துருக்கபாஷையிலெழுதினதினால் கெட்டுப்போயினவேயல்லாமல், இத்தேசபாஷையிலெழுதியிருக்குமாயின் நம்மவர்கள் நம்பவேநம்புவார்கள்.

A. M.

---

## சமயத்தாவருக்குஅழுக்காறுண்டா.

---

ஐயா,

தங்கள்பத்திரிகையில் "அழுக்காறுசந்தேகம்" என்னு மகுடவாயிலாக, அ-பூ-மு. என்பவர் சந்தேகங் கேட்டிருந்த கடிதத்தைக் கண்ணுற்று, ஞாயிற்றுக்கிழமைநாஸ்திகதண்டனமண்டபபிரசங்கத்திற்கு யானுஞ்சென்று கண்ணுற்றுக் காதுற்றவழி, பகலோன்பட்டு மாலைதொட்டு இருட்டுவந்துநின்றபோது, மின்கொழுப்புவர்த்தி முன்னிலையில், கேள்விக்கு விடையின்றி, பொருந்தாத நியாயத்தைப் புகலவும்; கேள்விகேட்டவரும் மற்றியாவரும் மவுனமாய்ச்சென்றனர். அதை முன்னிட்டுக்கடாவ நேர்ந்தது.

ஐயா, ஸ்ரீ சிவஞானச்செல்வராகிய தண்டலம் - பாலசுந்தரமுதலியாரவர்களே, அடியில்வருவனவற்றைச் சிந்தித்து, வருமாதிவாரப்பிரசங்கத்தில் இவற்றிற்குத் தூஷணையின்றி பதில் வேண்டுகின்றனன்.

பெரியபுராணம்,—திருநாவுக்கரசு நாயனார் சரித்திரத்தில், ௨௭௫, ௨௭௯ வது பாட்டுகளைச் சபையோருக்குப் படித்துக்காட்டி வியாக்கியானஞ்செய்தால் விளங்கும் திருமறைக்காடு என்பதை வேதம்பூசித்த தலமென்பதால், வேதத்திற்குக் கண், கால், கை, முதலியன வமைந்த மனிதவுருவாவது வேறெந்த ஜீவனுருவாவதுண்டா?

நாவுக்கரசரும்சம்பந்தரும் திருவிழிமிழலையிலிருக்கும்போது பஞ்சம்நேர்ந்ததனால், தமக்குத்தந்தகாசை வட்டமில்லாக்காசாகத்தரும்படி "வாசிதீரவே காசுநல்குவீர், மாசின்மிழலையீரேச லில்லையே" எனச் சம்பந்தர்பதிகமோதியதால், வாசிதீர்த்த அப்பர்காசுபோலத் தராவிடில் அந்தப்பாடலின்படி தம் வாயில் வந்தபடி ஏசுவோமென்று வற்புறுத்திச் சொன்னதாக ஏற்படவில்லையா? அது அழுக்காறன்றா? 'அழுக்காறவா வெகுளி யின்னாச்சொல் நான்கும், இழுக்காவியன்றதறம்;' 'கொடுப்பதழுக்கறுப்பான்சுற்றம், உடுப்பதூஉம் உண்பதூஉமின்றிக்கெடும்.' என்னும் நாயனார் குறளின்படி, அழுக்காறற்றவர்களாயின், அவ்விருவருமிருந்தவிடத்தில் பஞ்சம்வருவானேன்? பஞ்சமென்கிறசொல் இவர்கள் காதில் அடிபடலாமா? உணவின்றிப்பசித்திருக்கப்போம். 'தொல்லுலகில், நல்லாரொருவருளரேல் அவர்பொருட், டெல்லார்க்கும் பெய்யுமழை.' என நமது மூதாட்டியுரைத்த மூதுரைப்படியே, இச்சிவனடியார்களிருந்த ஊரைச்சுற்றிலும் மழைபெய்யாததால் நேர்ந்த கருப்பா! சோம்பல்மிகுதியால் நேர்ந்த கருப்பா? அப்பர்சுவாமிகளுக்காவது சம்பந்தசுவாமிகளுக்காவது பின்சந்ததியுண்டா? இவைகளுக்குப் பொருந்திய பதில்வேண்டும்.

சந்தேகி.

---

## மெய்யறிவு.

### க-ம் பாகம்.

---

(140-வது பக்கத்தொடர்ச்சி.)

---

இந்துமதப்படி மறுபிறப்பு உண்டல்லவா? (நாயனார்குறள்) "எழுபிறப்புந்தீயவைதீண்டா" எழுபிறப்பாவன - தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம். (திருவாசகம்) "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப், பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய், வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச் செல்லாஅநின்ற வித்தாவர சங்கமத்து, ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்." இதனால் ஆத்துமா - வினைக்குத்தக்கபடி மாறிமாறிப் பற்பல ஜனனமெடுக்கிறதாகத் தெரியவருகிறது. அதாவது - ஓர்காலத்தில்மனிதனாய்ப் பிறந்திறந்தவனது ஆத்துமா- புல்லாய்ப்பிறந்து, அதுநீங்க, பாம்பாய்ப்பிறந்து, மறுபடிமனிதனாய்ப்பிறந்து, பின்பு மரமோ, மாடோ, தேவனோ இவ்விதமாய் முன்பிறந்த பிறப்பே பிறந்தாயினும் வேறுபிறப்பு பிறந்தாயினும், பிறப்பு மாறிமாறிவருவதுதான். பிறப்புமாறி வருவதை இன்னின்னபிறப்பென்று அந்தந்த சடவுருவத்தினால் அறிவதன்றி, அதிலதில் விளங்கும் ஆத்துமாவினால் அறிவதில்லை, அந்தந்த காலத்தில் அந்தந்த பிறப்பிலே அதிலதிலுமிருப்பது அந்தவொரே ஆத்துமாதான். இப்படி ஆத்துமா வியாபித்திருக்கிற புல்லை அறுக்கலாமோ? கல்லை உடைக்கலாமோ? மரத்தை வெட்டலாமோ? தேளைக்கொல்லலாமோ? மூட்டுப்பூச்சியைநசுக்கலாமோ? கீரையைப் பிடுங்கலாமோ? செடியில் இலையைப் பறிக்கலாமோ, பூவைக் கொய்யலாமோ, பிஞ்சைத்திருகலாமோ, காய்கனிகளை அறுக்கலாமோ? இப்படிச் செய்வதினால் அந்த ஆத்துமாவுக்கு உபத்திரவமுண்டாகாதோ? அப்படிக்கல்ல, அந்த ஆத்துமா ஒன்றேயாயினும், அந்தந்த பிறப்புக்குத் தக்கபடி, ஓரறிவு, ஈரறிவு, மூவறிவு, நான்கறிவு, ஐந்தறிவு உடையதாய் மாறிமாறிவருமென்போமானால், சரீரத்திற்குமாறுத லுண்டாயிருப்பதுபோல ஆத்துமாவிற்கும் மாறுதலுண்டாயிருக்கிறதென்பதே சரீரத்திற் குண்டாகிய ஜனன மரணம், இளமை முதுமை, பிணிமுதலிய சகல அவஸ்தைகளும் ஆத்துமாவிற்கும் உண்டாயிருக்கிறதென்பதற்குப் பிரத்தியட்ச ருசுவாகும். (இந்த விஷயம் 'ஆத்துமா அழிவில்லாதது' என்பதைப் பற்றிய உபந்நியாசத்தில் ஸ்பஷ்டமாய் விளங்கும்.)

'ஆத்துமா' என்பது ஒன்றிருந்து, அதற்கு அறிவு சக்தி இருக்குமானால், அந்த சக்தி பொறி புலன்களின் வழியாய் வெளியாகவேண்டியதே யல்லாமல், பொறி புலன் அற்ற விடத்து வெளிப்படாது. ஒருவன் யாதொரு பொருளை கவனமாய்ப் பார்த்திருந்தபோது காது கேளாதிருந்ததென்பதும், கவனமாய்க் கேட்டிருந்தபோது கண்பாரா திருந்ததென்பதும், தொட்டால் தெரியாதிருந்ததென்பதும் ஒவ்வொருவருக்கும் அநுபவசித்தியா யிருக்கலாம். அறிவு—இரண்டு முதலாகப் பலவாயிருந்தால், ஓரறிவு தன் தொழிலைச் செய்கையில், மற்றோரறிவு தன் தொழிலைச்செய்யாமல் சும்மா இருப்பானேன்? குருடனுக்குப்பார்வையும் செவிடனுக்குக் கேள்வியும் திமிர்வாதக்காரனுக்கு ஸ்பரிசமும் இல்லாவிட்டால், அந்தந்த மனிதனுக்கு அந்தந்தப் புலன் அற்றிருப்பதாகச் சொல்லவேண்டுமேயல்லாமல், ஆத்துமாவிற்கு அறிவு குறைந்திருப்பதாகத் தோஷஞ் சொல்லலாமோ சொல்லக்கூடாது. இதனாலே ஆத்துமாவிற்கு அறிவு ஒன்றுதானென்றும், அதுவாசஞ்செய்கிற சடபதார்த்தத்துக்கு எத்தனை புலன்களிருக்கின்றனவோ அத்தனை புலன்களிலும் அது வியாபிக்கச் சக்தியுள்ளதா யிருக்கிறதென்றும் நிச்சயிக்கவேண்டியதாயிருக்கிறது. அதாவது—மரத்திற்குக் கட்புலனிருந்தால் அதற்குளிருக்கிற ஆத்துமா பார்க்கவேபார்க்கும். ஆகலால், புல்லைக்கிள்ளினாலும் அதிலுள்ள ஆத்துமாவிற்கு உபத்திரவந்தானே, "இப்படிச்சொன்னால் உலகம் நடவாது, மனிதர்கள்வாழ்வது கூடாமையாகும், ஆடுமாடுகள் கத்துகிறதுபோலப் புல் - பூண்டு செடி - மரங்கள் கத்துகிறதில்லையே, அதினாலே அந்தப்புல் பூண்டு முதலியவற்றிற்கு அறிவு குறைவுதான், அறிவு குறைந்ததை தமக்கு வேண்டியிருப்பதுபற்றிப் பறிக்கலாம் இழுக்கலாம் தோஷமில்லை" என்பார்களாகில், மேலே கண்டபடி கண்ணுந்தெரியாமல், காதுங்கேளாமல், ஸ்பரிச வுணர்ச்சியு மில்லாம லிருக்கிற மனிதனுக்கு மூன்றறிவு குறைந்திருப்பதினால் அவனை ஒருவன் தனக்கு நரமாமிசம் வேண்டியிருப்பதுபற்றிக் கழுத்தைஅறுத்துப்போடலாமே. ஆ! ஆ! நல்லதருமசாஸ்திரம்! அறிவு குறைவென்பதும் சப்தியாதிருக்கிறதென்பதும், நமது கண் பார்த்தமட்டிலும் காதுகேட்டமட்டிலும் மனம் நினைத்தமட்டிலும் நிச்சயிக்கப்பட்ட சித்தாந்தமாகும். அற்ப ஜந்துக்களில் கொசுகு சப்திக்கிறதைக் கேட்டிருக்கிறோம், மூசி - எறும்பு - தேள் - சப்தித்ததைக் கேட்டறிந்திலோம்; ஆதலால் பின்சொன்ன ஜந்துக்கள் சப்திக்கமாட்டாவென்று நிச்சயித்துப்போடுவதே சரியாக்கும். ஓரறிவு ஈரறிவு உள்ளதாக நமது முன்னோர்கள் சொல்லியிருக்கிற செடி மர முதலியவற்றைக்குறித்து ஐரோப்பா சாஸ்திரிகள் பரிசோதனைப் பிரமாணத்தினால் கண்டறிந்து நிலைநாட்டியிருக்கிற தத்துவங்களை அறிவோமாகில் நாம் வெட்கிப்போகவேண்டும்.

(இன்னும்வரும்.)

———o———

## கல்லு நாதனல்லவோ.

———o———

திருவெவ்வளூரில் வயித்திய வீரராகவப்பெருமாளுக்குக் கையொடிந்ததென்று சொல்லுகிறார்கள். கையொடிந்தது எதற்கு? கல்லினாலும் சுண்ணச் சாந்தினாலும் செய்யப்பட்டிருக்கிற விக்கிரகத்துக்குத் தானே? அதைத்தானே ராகவனென்கிறார்கள். மூலஸ்தானத்திலுள்ள விக்கிரகக்கல்லை ராகவ னென்கிறார்களே யல்லாமல் வாயிற்படிக்கல்லையாவது ஸ்தம்பக்கல்லையாவது ராகவனென்கிறார்களோ? இதனாலே யாகிலும் கல்லு நாதனாயிற்றென்று தெரியவில்லையா? ராகவன் காலிற்றொடுசெருப்பு கட்டி ராக்காலத்தில் சஞ்சாரஞ் செய்தபோது இடறிவிழுந்து கைமுறிந்ததோ, அல்லது சுண்ணாம்பு காரஞ்செத்து, பந்தனையற்றுக் கையிற்றதோ யோசித்துப்பாருங்கள். ஒவ்வோர் சமயத்தில் வயித்தியனுக்கும் வயித்தியன வேண்டியிருக்கிறான். வயித்தியனாகிய கொல்லெற்றுக்காரனும், மூலிகையாகிய கல்லுஞ்சுண்ணாம்பு மில்லாவிட்டால், ராகவனுடைய இற்றகை கூடிவரப்போகிறதில்லை. அதற்கும் காசுவேண்டும். காசுதேவனில்லாவிட்டால் அந்த வாசுதேவன் பேச்சு அம்பலந்தான். சைவமதசித்தாந்த சிரோமணியாயும் 'Watch & Clock Repairer' என்னும் பட்டப்பெயர் தரித்தவராயும் விளங்காநின்ற அருணசல முதலியாருக்கு இந்தமட்டில் கண்திறந்தேயிருக்கும்; இன்னும் அதிகமாய் அவருக்குச்சொல்லவேண்டுவதில்லை. இனிமற்றுஞ் சிலருடைய அபிப்பிராயத்தை ஆராய்வோம்.

A. M.

---

## நாத்திகமதகண்டனம்.

---

சாத்திரமில்லாமல் சைவத்தை தூத்துகின்றநாத்திகரே உமக்குண்டாகிய ஞானம் சுவஞானமென்றும், அந்த ஞானத்தினுக்கு யாதேனும் பின்னமுண்டா வென்றும், தத்துவவிவேசினி யென்னும் பத்திரிகையில், 1886ஆ ஆகஸ்டீ 8உ புறப்பட்ட பத்திரிகையில் நிர்வாணப்பட்டணத்தில் நீர்ச்சீலை கட்டினவன் பைத்தியக்காரன்தானே எனவே பேர்கொடுத்து அதனில் வரைந்தாய்.

புத்தியை யுடையபோலவிருந்தனை, புகலக்கேணீ சுவஞானமென்பது வையச் சொல்லா? வழக்கச்சொல்லா? வேதச்சொல்லா? விதிச்சொல்லா? அது பகுபதமா? பகாப்பதமா? உமக்குண்டாகிய ஞானம் இயலாயுடையதா? செயலாயுடையதா? சைவாகமங்களில் சொல்லப்பட்ட ஆத்ம தத்துவம், வித்தியாதத்துவம், சிவதத்துவம் ஆகிய மூவகை தத்துவங்களும் உமக்குத் தெரியுமா? உம்மைஉமக்குத் தெரியுமா? இவைகள்யாவும் தெரியுமேயாயின் மேல்வரும் பத்திரிகையில் உமதுபேர் உம்மைப்பெற்றோர் பேருடன் வரைந்துகாட்டுக அல்லது வாயை அடக்குக. உமக்குண்டாகிய ஞானம் சங்குண்டாயபோதே அதன் நிறமாகிய வெண்மையும் அதுனுட னுண்டாகியதுபோல நீர் மாதாவின் கருப்பைக்கு ளுண்டாகும்போது உமது ஞானமும்கூட உதிக்கவேண்டும் சங்கழியுங்காலம் வரைக்கும் அதின் வெண்மையானதுகூடயிருந்து சங்கழிகின்றபோதே அதன் வெண்மையுங்கூட அழிகின்றனபோல உமக்குண்டாகிய ஞானமும் நோய் மூப்பு கவலைமுதலிய துன்பங்கள்வந்து பொருந்தியகாலத்தும் அது நீங்காதிருந்து உமது தேகம்நீங்கும்போதே அதுவுங்கூட நீங்கவேண்டும் அஃதின்றி ஓர்காலத்திலே உற்பத்தியாய் ஓர்காலத்திலே அழிதலால் உமக்குண்டாகிய ஞானம் இயல்யன்று ஆதலால் மாயாகருவிகளை உமக்குத்தந்து உம்மால் விரும்பப்பட்ட போகங்களை அநுபவித்தற்கேதுவாகிய ஞானத்தைதருபவன் ஒருவன்வேண்டும்.

யாழ்ப்பாணம்
சிதம்பரநாதபிள்ளை குமாரர்
நாராயணபிள்ளை.

---

மேற்படி கடிதத்தில் எழுத்துப்பிழை சொற்பிழைகளையும் பாஷைநடைபேதத்தையுங் கவனிக்கும்பொருட்டு, அவற்றை அங்கங்கே வேறுவிதஎழுத்தால் பதித்திருக்கிறோம். அக்கடிதத்திலே ஒருமை பன்மை தெரியாமல் உளறியிருக்கிறது. பிள்ளையவர்கள் 'உங்களுக்குண்டாகியஞானம் சுவஞானமென்றும், அந்தஞானத்தினுக்கு யாதேனும் பின்னமுண்டாவென்றும்' தத்துவவிவேசினியில் சொல்லியிருப்பதாகக் குறித்திருக்கிறார்; இதனாலே சுவஞானிகள் ஏதோ அகங்கரித்துச் சொன்னதாக அவருடைய அபிப்பிராயம். அதுதப்பு. எங்களில் சிலர் மதச்சின்னங்களை யணிகிறார்களென்றும் மதாசாரங்களை அநுஷ்டிக்கிறார்களென்றும் மதஸ்தர்கள் இகழ்ச்சிசெய்ததற்குச் சமாதானமாகச் சிலதிருஷ்டாந்தங்களை யெடுத்துக்காட்டி அவர்கள் தங்கள் உற்றாருடைய பலாத்கார முதலியவற்றிற்கஞ்சி அப்படி நடக்கவேண்டியதிருக்கிறதென்றும், அதினாலே அவர்களுடைய சுவஞானத்திற்குப் பின்ன முண்டாகாதென்றுஞ் சொன்னோம். இதுபற்றிப் பின்னால் விவரமாயெழுதலாகும். ஆகஸ்டு 22உபத்திரிகையில் 'நாஸ்திகரென்போர் யாவர்' என்னும் தலைப்பினையுடைய சங்கதியினாலும், 29உ பத்திரிகையில்

'நாஸ்திகக்கொள்கை' என்னும் தலைப்பினையுடைய சங்கதியினாலும் சுவக்கியானிகளுடைய அடக்கமான கருத்து இன்னதென்று ஸ்பஷ்டமாய்விளங்கும. 'சுவக்கியானம்' 'சுவக்கியானி' என்பதற்குப் பொருள் இங்கிலீஷில் 'Freethought' 'Freethinker' என்பதற்கு என்னபொருள் அமைக்கப்பட்டிருக்கிறதோ அதுதான். சுவக்கியானமென்பது இன்னபொருள தருவதற்காக இடப்பட்டபெயரென்றுதத்துவவிவேசினியில் பலமுறை விரித்துச்சொல்லியிருக்கிறது. அதின் முக்கிய கருத்தாவது—விசாரணையினாலும் பரிசோதனையினாலும் எங்களுக்கு உண்மையானவையாய்த் தோன்றுகிற விஷயங்களைப்பற்றிய ஞானத்திற்கு சுவஞானமெனப் பெயரிட்டுக்கொண்டதுதான். அந்த ஞானத்தை வெளியிடுவதினாலே அது இராஜாங்க மதத்திற்கு விரோதமாயிருந்து சிட்சைகிடைக்கிறதாயிருந்தாலும், விரோதத்தினாலே ஜனங்களுடைய தூஷணைக்கு உள்ளாகிறதாயிருந்தாலும், அதற்கஞ்சாமலும், ஆஸ்திகர்களுக்குள்ளேமனதில் கடவுள் நம்பிக்கையும் பாப பயமுமற்ற அனேகர் ஜனங்களுடைய ரோதனைக்குப் பயந்து வேதோத்தமாகச் செய்யவேண்டிய காரியங்களையெல்லாம் வெகு அலட்சியமாக மேலுக்குச் செய்துவருவதை நாம் காணுகிறபடி நாங்கள் பயந்து நடிக்காமலும், மனசாட்சியின்படி உறுதியாக நின்று எங்களுக்குத் தெரிந்தமட்டில் உண்மையைக்கடைப்பிடியாகப் பிடிப்பதே எங்கள் கொள்கை. இந்தத் தன்மையுஞ்சேர்ந்துதான் சுவஞானம். ஸ்வ என்பது சொந்தம், அதினாலே ஸ்வக்கியானமென்பது எங்களுக்கேயுரிய ஞானம். இதுநிற்க: மேற்படி கடிதத்தில் முதல்பாராவிலே 'பத்திரிகையில்' என்பது இரண்டுதரமும் 'அதனில்'என்னும் சுட்டும் ஒரேவாக்கியத்தில அமைந்திருப்பதைப் பார்க்குமபோதே மேற்படி இலக்கணப்புலியாருடைய பாஷாக்கியானம் துலக்கமாயிருக்கிறது. வையச்சொல்லும் வழக்கச்சொல்லும் வெவ்வேறு? விதிச்சொல்லாவதென்ன? தலையெழுத்துச்சொல்லா? அது பகுபதமானால் நாஸ்திகமதம் ஹதமாய்ப்போகுமோ, அல்லது பகாப்பதமானால் ஹதமாய்ப்போகுமோ எமக்குத் தெரியவில்லை. அதை யவரோ யெடுத்துக்காட்டி ஹதஞ்செய்திருந்தால் வெகு சுலபமாயிருக்கும். கிளிப்பிள்ளையானது தான் கற்றது கற்றபடிச்சொல்லும். இப்பிள்ளையோ தான் பள்ளியில்கற்ற இலக்கணச்சுருக்கவினாவிடைவாசகபாடங்களில் வெகுவாய்மறந்து; ஞாபகமிருந்த சிலசொற்களை எழுதினார்.எமதுபெயரையும் எம்மைப்பெற்றார் பெயரையுஞ் சொன்னால் பேசலாமென்றும் சொல்லாவிட்டால் பேசக்கூடாதென்றும் நாராயணபிள்ளை கட்டளையிட்டார். அது இன்னதென்று எமக்குத் தெரியவில்லை. பேசுகிறவன் தன்னைப் பெற்றார்பெயரைச் சொல்லவேண்டிய நிமித்தம் அவர் தன் பிதாவின்பெயரைச் சொன்னார்போலும்; ஆனால் மாதாவின் பெயரைச்சொல்லமறந்துபோனார்.

இத்ததியில நாஸ்திகத்துக்கு விரோதமான கடிதத்தை அடக்கிப்போட்டோமென்கிற அபவாத முண்டாகாதபடி அவலட்சணமும் அப்பிரயோஜனமுமான அக் கடிதத்தைப் பிரசுரஞ்செய்து, பத்திரிகையை நிரப்பி, நமது பத்திரிகா நண்பர்களின் காலத்தில சிறிது வியர்த்தமாக்குவதற்காக அவர்கள் எம்மை மன்னிக்கும்படி கேட்டுக்கொள்ளுகின்றனம். இனி அப்படிப்பட்ட கடிதங்களுக்கு நமது பத்திரிகை இடந்தரமாட்டாதென்று நமது கடிதநேயர்கள் அறிந்துகொள்க.

A. M.

---

## கடிதம்.

ஐயா,

ஐந்தாறு வருஷங்களுக்குமுன்னே நாஸ்திகருக்கும் ஆஸ்திகருக்கும் எழுத்துமூலமாய் வாதம் நடந்ததாகக் கேள்வியுற்றோம். நாங்கள் இரண்டொருவருஷத்திற்குட்பட்ட கையொப்பக் காரர்களாகையால், அதுசங்கதி யொன்றும் எங்களுக்குத்தெரியாது. எங்களைப் போலவே நூதன கையொப்பக்காரர்கள் அனேகரிருப்பார்கள். அவர்களும் அதையறியவேண்டியதே. ஆதலின், அந்த விஷயத்தைத்தமது பத்திரிகையில் கொஞ்சகொஞ்சமாய்ப் பிரசுரஞ்செய்து வருவீர்க ளாகில், விசாரணையை விரும்புகிற எங்கள் யாவருக்கும் பெருத்த உதவியாயிருக்கும்; அதற்காகத் தமக்கு நன்றிகூர்ந்தவந்தனஞ் செய்வோம்.

சிலகையொப்பக்காரர்.

---

## அறிக்கை.

நமது மெம்பர்களும் கையொப்பநேசர்களும் தாங்கள்பெறுகிற ஒருபிரதிக் கதிகமாக "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பிரதியாவது, "தத்துவவிவேசினி" என்னுந் தமிழ்ப்பிரதியாவது பெறவிரும்பினால்,அடியிற்கண்டிருக்கிற குறைந்தவிதத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மாசமொன்றுக்கு அதிகமாகவாங்குகிற

இங்கிலீஷ் பிரதி - க - இ .. அணா ச
தமிழ்ப்பிரதி ... - க - இ ... அணா உ

இரண்டுபிரதிகள் ஒரேதபாற்செலவில் அனுப்பக்கூடுமாதலால், அதிகபத்திரிகை ஒன்றுக்கு மேற்பட்டால் மாத்திரமே மாசமொன்றுக்கு வேறே இரண்டணா தபாற்செலவு கொடுக்கவேண்டும்.

இவ்விதமாய்ப் பத்திரிகையைப் பரவச்செய்து, இரட்டைப்பேற்றுச்சகோதரர்களாகிய—மடமை, மூடபக்த்தி---என்னும் இராக்கதர்களோடு போராடி வெற்றிபெறுவதற்கு நமது மெம்பர்களும் நண்பர்களும் துணைபுரிவார்களென்று நம்புகிறோம.

---

இந்தியாவிலுள்ள

சுவக்கியானிகளை

### மதிராஸ் சிக்கியுலர்சோசைட்டியில்

மெம்பர்களாகச் சேரும்படி

கேட்டுக்கொள்ளலாகின்றது.

உள்ளூர்மெம்பர் - மூன்றுமாசத்திற்கு—ரூ 3—0—0
வெளி ,, ,, —ரூ 1—14—0

செலுத்தவேண்டும். அப்படி சேருகிறவருக்கு "தின்கர்" என்னும் இங்கிலீஷ் பத்திரிகையாவது, "தத்துவவிவேசினி" யாவது இலவசமாக அனுப்பப்படும்.

---

### தத்துவவிவேசினி.

நான்குபக்கம், பிரதி 1க்கு விலை அணா 1.

---

### தமிழ்சந்தாவிபரம்.

| உள்ளூர்—(அட்வான்சு.) | | | | வெளியூர்—(அட்வான்சு.) (தபாற்செலவுஉள்பட) | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | Rs. | As. | P. | | Rs. | As. | P. |
| மாசம் 1-க்கு | 0 | 4 | 0 | மாசம் 1-க்கு | 0 | 5 | 0 |
| ஷை 3-க்கு | 0 | 10 | 0 | ஷை 3-க்கு | 0 | 13 | 0 |
| ஷை 6-க்கு | 1 | 2 | 0 | ஷை 6-க்கு | 1 | 8 | 0 |
| வருஷம் 1-க்கு | 2 | 2 | 0 | வருஷம் 1-க்கு | 2 | 14 | 0 |

எல்லாத் தமிழ்ப்பத்திரிகைகளையும்
சென்னை முத்தியாலுப்பேட்டை இலிங்கசெட்டிவீதி
307 - வது நம்பர் வீட்டில்
பு· முனிசுவாமிநாயகருக்கும் ;
1886ம் - வருஷ முதல் சந்தாக்களையும்,
இங்கிலீஷ் பத்திரிகைகளையும்,
வேப்பேரி சில்வர்ஸ் ரோட்டில்
மதிறாஸ் செகுலர்சொசைட்டி ஆனரரிசெக்ரிட்டேரி
மெஸ்டர். அப்ஷன்துரை யவர்களுக்கும்,
அனுப்புதல்வேண்டும்.

---

Printed and Published for the Proprietor at the VURTHAMANATHARUNGINI PRESS, No. 174, Dayaraja Moodelly Street,—Madras.